# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிலவமைப்பு (Landscaping) மற்றும் வாகன நிறுத்துமிட (Parking) வசதிகள் அபிவிருத்தி திட்டத்தின் கட்டுமானம்

## ஒப்பந்த (விலைமனு) இலக்கம்: TRC/ADM/01/24/03/34

கொழும்பு - 08, எல்விட்டிகல மாவத்தை, இல.276 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை) தலைவரினால் கீழ்குறிப்பிட்டுள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிலவமைப்பு மற்றும் வாகன நிறுத்துமிட வசதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் கட்டுமான நடவடிக்கைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**1. வேலை விடயப்பரப்பு**

நிலவமைப்பு மற்றும் வாகன நிறுத்துமிட வசதிகள் அபிவிருத்தித் திட்டம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL)

- மோட்டார் வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் மோட்டார் வண்டிகள் நிறுத்துமிடங்கள் அமைத்தல்.
- புதிதாக விரிவாக்கிய கட்டிடத்திற்கு வாகனங்களை நிறுத்துவதற்கான மூடுகை வசதி ஒன்றை (Car Porch) அமைத்தல்.
- பழைய நிர்வாக கட்டிடத்தை மற்றும் புதிதாக விரிவாக்கிய கட்டிடத்தை ஒன்றோடொன்று இணைக்கும் பாதை (கொரிடோ ஒன்று) அமைத்தல்.
- இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னால் உள்ள வளாகத்தில் மழை நீர் வடிகால் வசதிகள் அபிவிருத்தி உட்பட கட்டிடக் கலை மற்றும் நிலவமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

கொழும்பு - 08, எல்விட்டிகல மாவத்தை, இல.276 இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு வளாகத்தில் அமைந்துள்ளது.

**கட்டுமான கால எல்லை 60 நாட்கள்**

1. தேசிய போட்டி ரீதியிலான விலைமனு நடைமுறையின் படி விலைமனு மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்க தகுதி பெற்ற சிறந்த விலைமனுதாரர் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

   கட்டுமான துறை அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவை பெற்றிருக்க வேண்டும்.

   பிரதான துறை : கட்டிடங்கள் கட்டுமான நடவடிக்கைகள்

   தரம் : பிரதான ஒப்பந்ததாரர்கள் - C6 அல்லது அதனை விட உயர் தரத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.

3. ஒப்பந்த வழங்கீட்டிற்கான தகைமையை பெற்றுக் கொள்ள தேவையான தகைமைகள்
   - சென்ற ஐந்து வருட காலத்திற்குள் மேற்கொண்ட கட்டுமான நடவடிக்கைகளில் சாதாரண வருடாந்த பெறுமதி ஆகக் குறைந்தது 30 மில்லியன் ரூபாவாக இருக்க வேண்டும்.
   - இந்த செயற்றிட்டத்திற்கு மாத்திரம் தேவையான குறைந்த பட்ச நீர்மை சொத்து (Liquid Assets) மற்றும் / அல்லது கடன் வசதி பெறுமதி 05 மில்லியன் ரூபாவாக இருக்க வேண்டும்.
   - சென்ற 05 வருட காலங்களினுள் ஒரு ஒப்பந்தத்தின் கீழ் (குறைந்த பட்சம் 50% பூரணப்படுத்தியுள்ள) 20 மில்லியன் ரூபா அல்லது அதனை விட அதிக பெறுமதியான கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கான அனுபவம் காணப்பட வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 இல் பெற்றுக் கொள்ள முடியும். வேலை நாட்களில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப.3.00 வரை மேற்படி முகவரியில் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக பிரிவு காரியாலயத்தில் விலைமனு ஆவணங்களை பரிசீலனை செய்யலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், ஆங்கில மொழியில் அமைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் ஆவணம் ஒன்றை 2026.06.01 தொடக்கம் 2026.06.17 மு.ப.9.00 தொடக்கம் பி.ப.3.00 வரையான காலத்தினுள் பணிப்பாளர் (நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள்), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 இற்கு எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றை முன்வைத்து, மீளளிக்கப்படாத ரூ.7,500.00 ஐ பணமாக செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.
6. விலைமனு 2026.06.18 ஆம் திகதி பி.ப.2.00 க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற முகவரிக்கு கையளிக்க வேண்டும். தாமதமாகி கிடைக்கப்பெறுகின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் காலம் நிறைவு பெற்ற உடனேயே அந்த சந்தர்ப்பத்திற்கு கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கின்ற விலைமனுதாரர்களுடைய பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. எல்லா விலைமனுவுடன் ரூ.500,000.00 விலைமனு பிணைவைப்பொன்று முன்வைக்க வேண்டும். 2026.06.18 தொடக்கம் 2026.09.14 வரை (விலைமனு செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் 28 தினங்கள் வரை) செல்லுபடியாகும்.
8. விலைமனு முன்னைய கூட்டம் 2026.06.10 திகதி மு.ப.10.00 க்கு கொழும்பு - 08, எல்விட்டிகல மாவத்தை, இல.276, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பிரதான காரியாலயத்தில் நடைபெறும்.

**மேற்படி விலைமனுக்களை அனுப்ப வேண்டிய முகவரி,**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல.276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**2026.05.29**